தேவையில்லை என்றும் பரிந்துரைத்திருந்தது. இதனை ஆய்ந்து அரசு கொள்கை அளவில் நூலக ஆணைக் குழுக்கள் சில மாற்றங்களுடன், நூலகப் பணியை தொடர்ந்து நடத்தலாம் என கருதுகிறது.

பொது நூலக அலுவலர்கள்.

*வினா எண் 387 —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர்கள் அண்மையில் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி இராமநாதபுரம் மாவட்ட நூலக ஊழியர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன:—

1. மாதந்தோறும் 1-ந் தேதி ஊதியம் வழங்க வேண்டும்,

2. குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம் ரூ.10,000 நூலகப் பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

3. ஓய்வு ஊதியம் வேண்டும்.

4. பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

5. அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் வண்ணம் நூலக ஊழியர்களை அரசுப் பணியாளர்களாக விரைவில் அறிவிக்க வேண்டும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன? புதிதாக, நூலகங்களைத் துவக்க இந்த அரசு முயற்சி எடுத்துள்ளதா? நூலகங்களை, நூலக ஆணைக் குழு நடத்துவதற்கும் அரசே நடத்துவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப் போன்ற சலுகைகளை அளிக்க, அரசு நிதித்துறை சிறப்புத் தனி அதிகாரி திரு. சீனிவாசனைக் கொண்ட கமிட்டி போட்டது, அதனுடைய முடிவு என்ன? எனவே, நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போன்ற......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தனை துணைக் கேள்விகளைப் போட்டால், அமைச்சர் நினைவில் வைத்து எப்படி பதில் சொல்ல முடியும்? 4 துணைக் கேள்விகள் போட்டீர்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நூலகப் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக்க வேண்டுமென்பது நூலகச் சீர்திருத்தக் குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று. அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் நூலக ஊழியர்களுக்கும் தரப்பட, பின்னவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதுதான் நல்லதா, அல்லது உள்ளாட்சிக் கழக ஊழியர்களுக்கு இச்சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது போலச் செய்தால் போதுமா என்பன போன்ற பல கருத்துக்களை அரசு மிகக் கவனத்துடன் ஆராய்ந்து வருகிறது. மேற் சொன்ன பரிந்துரைகளின்மீது அரசு முடிவு எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு தொடர்ந்து சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு பொது நூலகங்களில் பணி புரியும் ஊழியர்கள் ஏனைய அரசு ஊழியர்கள் பெறும் எல்லாவித சலுகைகளையும் பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை எப்பொழுது நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதையும், தனியார்களுக்குச் சொந்தம் இல்லாத, பொது முன்னேற்றத்திற்குத் தேவையான சில நூலகங்களின் கட்டிடங்களுக்கு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, அந்தக் கட்டிடங்களுக்கு வரி கிடையாது, நெருக்கடி நிலை காலத்திலும் கிடையாது. ஆனால் இன்றைய தினம் மாயூரத்தில் அண்ணாவின் பெயராலே இலவசப் படிப்பகமும், நூலகமும் நடைபெற்று வருகின்ற அண்ணா பகுத்தறிவு மன்றக் கட்டிடங்களுக்கு ஏராளமான வரி விதிப்பட்டிருக்கிறது. அது தனியாருக்கும் சொந்தமானது அல்ல, கட்சிக்கும் சொந்தமானது அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்தது போல செய்யாவிட்டாலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செய்ததைப் போலவாவது அந்தக் கட்டிடத்திற்கு வரி விலக்கு அளிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நூலகத் திட்டத்தை மேம்படுத்தவும் சீரிய முறையில் செயலாற்றவும் அரசால் ஏற்படுத்தப்பட்ட நூலக சீரமைப்புக் குழு, நூலக ஆணைக் குழுக்கள் இயங்கி வந்த முறையினை ஆராய்ந்து, ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் முழுநேர மாவட்ட நூலக அதிகாரி ஒருவரை நியமித்தல், நூலக ஆணைக் குழுவை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளுதல், நூலக ஆணைக்குழுக்கள் சரியாக இயங்காததால் அவற்றை நீக்கிவிட்டு

1979 மார்ச் 14]

எல்லா நூலகங்களையும் அரசே எடுத்துக் கொள்ளல் போன்ற பல்வேறு பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இவைகளில் ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் முழு நேர மாவட்ட நூலக அதிகாரியை நியமிக்கும் பரிந்துரையை ஏற்று, ஏற்கனவே அரசு ஆணை எண் 2692, கல்வி நாள் 16-12-76-ல் பதிமூன்று மாவட்ட நூலக அதிகாரிகளை நியமனம் செய்துள்ளது. மற்றவைகள் பரிசீலனையில் இருக்கின்றன. வரி குறைப்பைப் பற்றிக் கேட்டார்கள். அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு நூலகங்களில் பால் உணர்வைத் தூண்டக்கூடிய வகையில் புத்தங்களையும், வேறு மதநம்பிக்கைகள் கொண்ட புத்தகங்களையும் நிறைய வைத்திருக்கிறார்கள். அது போல மூட நம்பிக்கைகளையும், பகுத்தறிவற்ற கீழ்த்தரமான நூல்களையும் அங்கே வைத்திருப்பதைக் காண்கிறோம். அது போல் இல்லாமல் செய்வதற்கும், அவற்றை முறைப்படி மாற்றி யமைப்பதற்கும், ஒரு குழுவை ஏற்படுத்தி ஆராய்ந்து என்னென்ன புத்தகங்களை வைக்க வேண்டும் என்று முயற்சி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும், அதேபோல முற்போக்கு சிந்தனைகளைக் கொண்ட, படிப்பவர்களுக்கும் சமூகத்திற்கும் முன்னேற்றம் தரக்கூடிய புத்தகங்களை, பெரிய சிந்தனையாளா களின் படைப்புகளை, குறிப்பாக கார்ல் மார்க்ஸ், ஏன்ஜெல்ஸ், மாசேதுங் போன்ற சிந்தனையாளர்களின் புத்தகங்களை வைப் பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சமூக முன்னேற்றத்திற்கும், முற்போக்கான கருத்துக்களை கொண்ட புத்தகங்களை நூலகங்களில் வைக்க வேண்டும் என்ற கருத்து மிக முக்கியமானது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. அதேபோல மூட நம்பிக்கைகளின் விளைவாக பழமை கோட் பாடுகளை கொண்டபுத்தகங்கள், நல்ல முற்போக்கு கருத்துக்களை கொண்ட புத்தகங்கள் இருக்கவேண்டும் என்தையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே தமிழகத்தில் நூலக பட்டப்படிப்புக கல்லூரிகள் எத்தனை இருக் கின்றன? அந்த பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற பட்டம் பெற்ற பட்டதாரிகள் நூலகங்களில் வேலை இல்லாமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதனை அவர் தனிக் கேள்வியாக போட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 14

திரு சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள நூலக கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் பழுது பார்க்கப்படாமல், வெள்ளையடிக்கப் படாமல், கேவலமான நிலையில் சிதிலமடைந்திருக்கின்றன. அவற்றை உடனடியாக பழுது பார்த்து ரிப்பேர் செய்ய அரசு முயலுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள நூலகங்களுக்கு நல்ல கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒரு ஆலோசனை அரசின் பரிசீலனையில் ஏற்கனவே இருந்து வருகிறது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஊழியர்களுக்கு, முதல் தேதி சம்பளம் கொடுக்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று, அவர்களுக்கு கொடுக்கின்ற சம்பளமே குறைவு—அதையும் முதல்தேதி கொடுக்கின்ற நிலை உருவாக வேண்டும் என்பதை அரசு ஏற்றுக் கொண்டு கொடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி வசதி செம்மையாய் இல்லாத இராமநாதபுரம் போன்ற ஒரு சில மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் தவிர, மற்ற நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கு மாதந்தோறும் 1 ஆம் தேதி ஊதியம் வழங்குவதில் தடை ஏற்படுவதில்லை. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் நிதி நிலைமை சீர் குலைவதற்கான முக்கிய காரணம், உள் ஆட்சிக் கழகங்கள், அவைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய நூலக வரியை அவ்வப்போது செலுத்தாததே. அதனால் அக் குழுக்களுக்கு, அரசால் வழங்கப்பட வேண்டிய இணை மான்யமும் தடைபடுகிறது. உள் ஆட்சிக் கழகங்கள், வசூலிக்கப்பட்ட நூலக வரியை, அவ்வப்போது செலுத்த வேண்டிய அவசியத்தை அவைகளுக்கு உணர்த்தும் பொருட்டு அரசின் மட்டத்திலிருந்து அவைகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு வழங்க வேண்டிய இணை மானியங்களை ஒப்பளிப்பதில் எந்த வித தாமதத்திற்கும் இடம் கொடாமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் ஒரு சில நூலக ஆணைக் குழுக்களில் மாதம் 1-ந்தேதி ஊதியம் வழங்குவதில் சில சமயங்களில் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது. அதை நீக்குவதற்கும் தீவிரமான முயற்சிகளில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[முற்பகல் 9·40]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நூலகக் கட்டிடங்கள் உள்ளன? தருமபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட

1979 மார்ச் 14]

நூலகக் கட்டிடம் வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்து உள்ளதா? அதைப்பற்றி பரிசீலித்து இந்த ஆண்டாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. சேலம். மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டிடங்கள் வசதி அற்ற நிலையில் இருப்பதால், படிப்பதற்குக் கூட வசதி இல்லாமல் இருப்பதால், அரசு அதை உணர்ந்து உடனடியாகச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வாடகைக் கட்டிடமா, சொந்தக் கட்டிடமா என்பதை விட வசதிகளைக் கொண்ட கட்டிடமாக இருக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் எந்தெந்த மாவட்ட நூலகங்களுக்கு கட்டிடங்கள் தேவை என்கிற அடிப்படையில் கட்டிடம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிச்சயமாக அந்தக் குறையைப் போக்க அரசு முயலும்.

மதிய உணவுக்கான தொகை வழங்கல்

*வினா எண் 388 திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள நீதி உதவி ஆரம்பப் பாடசாலை (காலனி)யில் வழங்கப்பட்ட மதிய உணவுக்கான தொகை ரூ. 965 வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அத்தொகையை அப்பள்ளிக்கு உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்கும்படி திண்டிவனத்திலுள்ள மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. மொ. பரமசிவம்: தலைவரவர்களே, திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் மதிய உணவு வழங்கியதற்காக 1975 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் உள்ள பாக்கி ரூ. 965